**செய்தி வெளியீடு எண்: 13/02/2021** **நாள்: 26.02.2021**

**பத்திரிக்கை செய்தி**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் எப்போதும் நிலையான மற்றும் திறமையான போக்குவரத்து முறையையும், சென்னை பொதுமக்களின் நலனுக்காக பல தனித்துவமான வசதிகளையும் வழங்கி வருகிறது.

பிப்ரவரி 24, 2021 அன்று, நேரு பூங்கா மெட்ரோ இரயில் நிலையத்திற்கும் எழும்பூர் மெட்ரோ இரயில் நிலையத்திற்கும் இடையில் மெட்ரோ இரயிலில் பயணித்த பயணி ஒருவர் மருத்துவ அவசரநிலைக்கு ஆளானார். இந்நிலையில் மெட்ரோ இரயில் ஓட்டுனர் திரு. பி. எம். ராஜீவ் மற்றும் எழும்பூர் மெட்ரோ இரயில் நிலைய கட்டுப்பாட்டாளர் திரு. ஜே. ராஜேஷ் இருவரும் அந்த பயணிக்கு உடனடியாக முதலுதவி செய்து அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.

அவர்கள் சரியான நேரத்தில் செய்த உதவி அந்த பயணியின் உயிரைக் காப்பாற்றியது. இது போன்ற நிகரற்ற மனிதாபமான செயல்பாடுகளை ஊக்குவிக்கின்ற வகையில், அவர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்பிற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ் இ.ஆ.ப., அவர்கள் மெட்ரோ இரயில் ஓட்டுனர் திரு. பி. எம். ராஜீவ் மற்றும் எழும்பூர் மெட்ரோ இரயில் நிலைய கட்டுப்பாட்டாளர் திரு. ஜே. ராஜேஷ் ஆகியோரை கௌரவித்து வெகுமதி மற்றும் நற்சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டு தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் திருமதி. சுஜாதா ஜெயராஜ் (நிதி), திரு. ராஜீவ் நாராயண் திவேதி (திட்டங்கள்), திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**